**செய்தி வெளியீடு எண்: 54** **நாள்: 23.01.2013**

## அரசு கேபிள் நிறுவனம், சென்னை மாநகராட்சி, LIC, BSNL கட்டணங்களை தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் இணையதள சேவை மூலமாக செலுத்தும் வசதி துவக்கம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கு இணங்க, **மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்** அவர்கள் அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மின்னியல் வங்கிச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழகத்தின் அனைத்து கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், இதர கூட்டுறவு நிறுவனங்கள், மற்றும் தனிநபர் வாடிக்கையாளர்கள் உடனடி பணப் பரிவர்த்தனைகளை செய்து கொள்ள ஏதுவாக இந்தச் சேவை பயன்பட்டு வருகின்றது. இணையதள வங்கிச்சேவை நடைமுறைக்கு வந்தபிறகு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்கள் இணையதள வங்கிச்சேவை வாயிலாக மின் கட்டணம் செலுத்தும் வசதி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, வாடிக்கையாளர்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு வணிக நிறுவனங்கள் வழங்கும் சேவைக்கான கட்டணங்களை, இணையதளம் வாயிலாக செலுத்தும் வசதியை, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான ஒப்பந்தம், சேவைக் கட்டணங்களை இணையதளம் வாயிலாக செலுத்தும் வசதியை வழங்கும் **“BILL DESK”** என்கிற முன்னணி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்டதன் அடிப்படையில், இன்று **(23.1.2013)** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் இணையதளம் வழியாகச் கட்டணம் செலுத்தும் சேவையினை துவக்கி வைக்கப்பட்டது. இதன் வாயிலாக, வங்கியின் வாடிக்கையாளர்கள் பல்வேறு வணிக நிறுவனங்கள் வழங்கும் சேவைகளுக்கான கட்டணங்களை இணையதள சேவை வாயிலாக, இலவசமாகச் செலுத்தி, அதற்கான ரசீதினை அச்சுப் படிவம் எடுத்துக் கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசின் **அரசு கேபிள் நிறுவனம் (TNACTCL), சென்னை மாநகராட்சி (Chennai Corporation), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (TNSTC), இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC), பாரத் சஞ்சார் நிகாம் லிட்., (BSNL), இந்திய மேலாண்மைப் பயிற்று நிறுவனம் (IIM), பெங்களூரு, இந்திய தொழில் நுட்பப் பயிற்று நிறுவனம் (IIT), சென்னை, சிட்டி வங்கி (Citi Bank), ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி (Standard Chartered) கடன் அட்டைகள், எச்.டி.எஃசி., டாட்டா AIG ஆயுள் காப்பீடு** உள்ளிட்ட நூறுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் சேவைக் கட்டணங்களை இதன் மூலம் செலுத்த முடியும். இந்திய அளவில், தலைமைக் கூட்டுறவு வங்கிகளிலேயே இச்சேவையை வழங்கிடும் முதல் வங்கியாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி திகழ்கிறது. இதுபோன்ற பல்வேறு சேவைகளை மக்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது **திருமதி. M.P. நிர்மலா, I.A.S**., அரசு செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, **திரு. P. அண்ணாமலை, I.A.S**., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், **திரு. R. இராஜேந்திரன்** கூடுதல் பதிவாளர் (வங்கி & கடன்) வங்கியின் தனி அலுவலர் **திரு. M.P. சிவன் அருள்**, கூடுதல் பதிவாளர்கள் திருமதி .வ.கலையரசி,இ.ஆ.ப., திரு.ப.மோகன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.கா.பிரமிளா, திருமதி நந்தகுமாரி மற்றும் **திரு.G. ரவிக்குமார்,** பொது மேலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**